# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.368/2018

## அ.சா. 16 (LW 29 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ஞானசேவியர் | **தொழில்** | |
| **த/க பெயர்** | பெஞ்சமின் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **01.09.2025.** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 மற்றும் 4வது எதிரிகள் ஆஜர் செய்யப்பட்டனர். மற்ற எதிரிகள் ஆஜரில் இல்லை. 355ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது அம்மையநாயக்கனூர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.06.2018 அன்று 08.30மணிக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அம்மையநாயக்கனூர் காவல்நிலைய குற்ற எண். 173/2018 இதச பிரிவுகள் 302 இதச வழக்கில் கொலையுண்டு இறந்து போன மோகன்ராஜ், த/பெ. பால்ராஜ் என்பவரை பிரேத விசாரணை செய்ய அம்மையநாயக்கனூர் காவல் ஆய்வாளரிடமிருந்து 11.20மணிக்கு பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதம் பெற்று 12.00மணிக்கு மருத்துவ அதிகாரியிடம் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். அந்த வேண்டுகோள் கடிதம் இதுதான். **அது அ.த.சா.ஆ.16. ஆகும்.** பிரேத பரிசோதனை முடிந்த பின்பு மோகன்ராஜின் தந்தை பால்ராஜிடம் பிரேதத்தை ஒப்படைத்தேன். இறந்து போன மோகன்ராஜ் அணிந்திருந்த முழுக்கை சட்டை, நீலநிற ஜீன்ஸ் பேண்ட், பச்சை கலர் Boomex ஜட்டி ஆகியவைகளை காவல் நிலைய பாதுகாப்பில் வைத்தேன். வழக்கின் சொத்தான இரத்தம் படிந்த மண், இரத்தம் படியாத மண் ஆகியவைகளை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைக்க ஆய்வாளர் வேண்டுகோள் கடிதத்தை நிலக்கோட்டை நீதித்துறை நடுவர் அவர்களிடம் ஒப்படைத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் இதுதான். **அது அ.த.சா.ஆ.17. ஆகும்.** மேற்படி சொத்துக்களை நீதிமன்ற உத்தரவு பெற்று மேற்படி உடைகளையும், மேற்படி இரத்தம் பட்ட மணலையும் மதுரை வட்டார தடயஅறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நான் என்ன பணிக்கு செல்கிறேன் என்பதை குறித்து வைக்கும் ஒரு பாக்கெட் டைரி இருக்கும் என்னிடம் இருக்கும் என்றால் சரிதான். ஆனால் அதை நான் இன்று

நீதிமன்றத்திற்கு எடுத்து வரவில்லை என்றால் சரிதான். 04.06.2018 அன்று நான் என்னென்ன பணிகள் செய்தேன் என்பதை பாக்கெட் டைரியில் குறித்து வைக்கவில்லை என்றால் சரிதான். நான் காவல்நிலைய ஆணைகளை நான் பின்பற்ற மாட்டேன் என்றால் தவறு. 04.06.2018 அன்று நான் எத்தனை மணிக்கு பணிக்கு சென்று எத்தனை மணிக்கு என் பணியை முடித்தேன் என்பதற்கான டைரி குறிப்பு இல்லை என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரித்த போது மேற்படி டைரி குறிப்பை கேட்கவில்லை என்றாலும் நான் அவர் விசாரணையின் போது அவரிடம் மேற்படி டைரியை சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் 04.06.2018 அன்று நான் காலை 06.00 மணிக்கு காவல் நிலையத்திற்கு பணிக்கு வந்து விட்டேன் என்றால் சரியல்ல. அன்று காலை 08.00 மணிக்கு காவல்நிலையத்திற்கு பணிக்கு சென்ற போது யார், யார் பணியிலிருந்தார்கள் என்பது எனக்கு ஞாபகம் இல்லை. அன்று ஆய்வாளரை அரசு மருத்துவமனையில் 08.30 மணிக்கு பார்த்தேன். ஆய்வாளர் என்னிடம் வேண்டுகோள் கடிதம் கொடுக்கும் முன்பு விபத்து பதிவேட்டு நகலை நான் பார்த்தேன் என்றால் சரிதான். அந்த விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள பிரேதத்தை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்ற போலிசார் பெயர் எனக்கு தெரியாது. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும் மேற்படி ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு ஆய்வாளரால் தயாரிக்கப்பட்ட ஒரு மேசை தயாரிப்பு என்றால் சரியல்ல. நான் பிரேத பரிசோதனை முடிந்த பிறகு பெற்ற சட்டை இரத்தம் பட்ட வெள்ளை முழுக்கை சட்டை என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை – இல்லை</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.01 20:55:01 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.